பொருளுலக இருளகற்ற
அருளாட்சி அமைப்போம்

ஏக்கங்களையும், தேக்கங்களையும் போக்க
சமுதாய மாற்றம் செய்வோம்.

---

தொடர்பு:

1 பரமாச்சாரியார் நெ. சேவுகன்,
C/o காதிவசுத்திராலயம், கொட்டாம்பட்டி. மதுரை 625103

2 தெய்வீகாச்சாரியார் சோ. இரவீந்திரன்
C/o சித்தர் ESI மருந்தகம். செம்பியம், சென்னை-11

3 அருள்மிகு காரல் மார்க்சு அருட்பணிமன்றம்,
Dr S. R நீலமேகம் பிள்ளை.
8, அருள்தாசபுரம், மதுரை-625018

4 சித்தரடியான் மு. இராமானுசதாசு,
இ. ம. இ. அருட்கோட்ட நிலையம், 12, காந்திபுரம்
5-ஆம் வீதி, காரைக்குடி

5 இருப்பாளர் ந. சண்முகம்,
24, புத்தகரம் கிராமம், இலக்குமிபுரம் PO, சென்னை-99

6 தவமுதாட்டி S சண்முகசுந்தரி,
75, சிவன் தெற்கு ரத வீதி, பாளையங்கோட்டை,
நெல்லை-627002


---

K V S பிரிண்டர்சு, தேரடி தெரு, பொன்னேரி.

# அருள்மிகு சொல்லடி நாயனார் பெரியார் ஈ. வெ. ரா.



சித்தர் காவிரி யாற்றங்கரைக் கருவூரர்



மெய்ஞ்ஞானக் கொடி



தமிழினத் தலைவர் சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா.



ஞாலகுரு சித்தர் கருவூரர் 12 வது பதினெண் சித்தர் பீடாதிபதி



தென் பாண்டித் தமிழர் ஞானசித்தர் ஆதிசங்கரர்

64 வது நாயனாராகத் திரு அவதாரம் செய்த
தமிழின உணர்வை ஊட்டிய
சொல்லடி நாயனார் தந்தை பெரியார் ஈ. வெ. ரா.

## இந்து மறுமலர்ச்சி இயக்கம்
[பண்பாட்டுக் கழகம்]

பதிவு; 135/83 தோற்றம்: கி.பி. 1772

அருட்பணி விரிவாக்கத் திட்ட வெளியீடு 1985

---

காணிக்கை ரூ. 5/-

# ஓர் வேண்டுகோள்

பத்தர்கள் உண்டியலில் காணிக்கைச் செலுத்துவதையே இந்து மத வளத்துக்கும், வலிவுக்கும், வாழ்வுக்கும் தாங்கள் செய்யும் கடமை என்று நினைக்கின்றார்கள். இது தவறு! ஏனெனில் கால வேகத்தாலும் கருத்துப் போராட்டங்களாலும் தவறான மத வெறிகளாலும் முறையற்ற நாத்திக வேதத்தாலும் இந்த மதத் தத்துவமும் சித்தமும், நடைமுறைகளும் அருளாளர்களைச் சார்ந்த வரலாறுகளும் போலியாகக் கேலியாக எண்ணப்படும் நிலை உருவாகிவிட்டது இந்த இழிநிலை, பழிநிலை, அழி நிலை, ஒழிநிலை, அவலநிலை, கேவலநிலை, அவசர அவசியமாக உடனடியாகத் தடுக்கப் பட்டாகவேண்டும். அதற்கு அனைத்துவகையான சித்தர்களின் வாக்குகளும் வாசகங்களும் எண்ணற்ற அறிக்கைகளாகவும், நூல்களாகவும் அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவும் வண்ணம் "இந்து மறுமலர்ச்சி இயக்கத்துக்கு" நன்கொடையாக வாரி வாரி வழங்குங்கள். —இதுவே நீங்கள் இந்துமத வழிபாட்டுக் கருவறை மூலவர்களுக்குச் செலுத்தும் காணிக்கை! காணிக்கை!! காணிக்கை!!!

அருளார்ந்த அறிவிப்பு வழங்குபவர்:

இந்து மதத்தந்தை, ஞாலாச்சாரியார், 12 வது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம்

ஞாலகுரு சித்தர் கருவூரார்

---

தலைமைப் பொறுப்பாளர்:
பிறமாச்சாரியார்: ஸ்ரீ கவிக்குமார்
56, N. G. O. காலனி, பொன்னேரி-601204.

## அருளுலக இருளகற்றிய அறிவுச் சுடரே
# பெரியார் ஈ.வெ.ரா.!

பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டில் தமிழினத் தலைவர் பெரியார் ஈ வெ ரா. அவர்கள் 64வது நாயனாராக 'சொல்லடி நாயனார்' என அறிவிக்கப்பட்டதற்கு தருகின்ற விளக்கம்.

"......சித்தர்கள் இந்து மதத்தை முறையாக முழுமையாகப் படைத்திருக்கிறார்கள் என்ற பேருண்மையினை விளக்குவனவாகத்தான் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், நவநாதங்கள், பதினெண் சித்தங்கள், நாற்பத்தெட்டு அருட் கலைகள், அறுபத்து நான்கு ஆயகலைகள், ஒன்பது கடவுட் கலைகள், ஒன்பது தெய்வீகக் கலைகள், ஒன்பது பேய்க் கலைகள் ஒன்பது நோய்க்கலைகள், ஒன்பது தேய்க்கலைகள், தொண்ணூற்றாறு வகை வழிபாட்டு நிலையங்கள், நாற்பத்தெட்டு வகை அருட் பட்டங்கள், எண்ணற்ற வகையான சாத்திறங்கள், சாத்திரங்கள், சாத்தரங்கள், தோத்திறங்கள், தோத்திரங்கள், தோத்தரங்கள், சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்தரங்கள், திருமந்திறங்கள், திருமந்திரங்கள், திருமந்தரங்கள், தந்திறங்கள், தந்திரங்கள், தந்தரங்கள், எந்திறங்கள், எந்திரங்கள், எந்தரங்கள், நிடதங்கள், துணை நிடதங்கள், இணை நிடதங்கள், காயந்திரிகள், பிருமணங்கள், பிறமணங்கள் [பிறமணங்கள் = பாட வேறுபாடுள்ளது.], பிறணவங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், மாந்தர மாந்தரீகங்கள், தாந்தரதாந்தரீகங்கள், ஏந்தரஏந்தரீகங்கள், அருள்வாக்குகள் அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாசகங்கள், குருவாக்குகள் குருவாசகங்கள், கருவாக்குகள்,

கருவாசகங்கள், திருவாக்குகள். திருவாசகங்கள் நேத்தரம், நேத்திறம், நேத்திரம், நேமம், நியமம் நிட்டை...... எண்ணற்ற கோடி சம்பிறதாயங்கள், சடங்குகள். மரபுகள் சட்ட திட்டக் கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள்......... முதலியவை படைக்கப் பட்டிருக்கின்றது.

இவற்றின் நேரடி வாரிசுகளாக உலகம் முழுதும் சித்தர்களின் வாரிசுகள். விந்து வழி வாரிசுகள் குருவழி வாரிசுகள் காலங்கள் தோறும் தோன்றிக்கொண்டுள்ளார்கள் ஏனென்ருல், சித்தர்கள் உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தே வாழ்ந்திடும் வழக்காற்றினை உடையவர்களாகவே இருந்திருக்கிருர்கள். இவர்கள். ஆங்காங்கே அங்கவியல் நிறைவுக்குரிய பெண்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் திருமணம் செய்து அவர்களோடு குறைந்தது 18 முதல் 48 மாதங்கள் வாழ்ந்து மேலே குறிப்பிட்ட மதச் செல்வங்களை அவர்களிடம் வழங்கி என்றென்றும் அந்தந்த வட்டார மக்கள் பெறுமாறு செய்திருக்கிருர்கள் இவற்றிற்கும் மேலாக இவர்கள் நாடு இனம் மொழி என்று வேறுபாடு கருதாமல் உலகெங்கும் தங்களுடைய விந்து வழி வாரிசுகளையும் உருவாக்கியிருக்கிருர்கள். எனவேதான், இந்த உலகில் தோன்றிடக் கூடிய எல்லா மதங்களும், அருளாளர்களும் சித்தர் நெறி எனும் தோட்டத்தில் பூத்த மலர்களே! காய்த்த கனிகளே! என்று சித்தர்கள் அறிவிக்கின்ருர்கள் ...'' குருபாரம்பரிய வாசகம்.

கி.பி, 1772-இல் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் கண்டப்ப கோட்டை வாழ்ந்த சித்தர் ஏளனம் பட்டியார் எனப்படும் சித்தர் கருவூரார் உ. இராமசாமிப் பிள்ளையவர்கள் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை தோற்றுவிக்கும் பொழுது அறிவித்த குருபாரம்பரிய வாசகங்களில் இதுவும் ஒன்று இதனை இங்கு எடுத்துக் காட்டுவதற்குக் காரணம் சித்தர்களுக்கு மதவேறுபாடுகளோ, நாத்திக



ஆத்திக வேறுபாடுகளோ இல்லை என்பதற்காகத்தான். மேலும், சித்தர் நெறிப்படி பார்த்தால் நாத்திகமும் ஆத்திகமும் ஒன்றுதான். அகஞானத்தால் தயாராகும் மெய்ஞானியும், புற ஞானத்தால் தயாராகும் மெய் ஞானியும் அநுபவப் பூர்வமாகப் பார்த்தால் ஒருவரே யாவர்.

சித்தர்கள் தமிழ்மொழி வழியில் தோன்றிய **மக்கள் தொண்டர்களை**'' உண்மையான பத்தர்கள் என்று மதித்-து அவர்கள் வணங்கிய தெய்வங்களின் அடிப்படையில் **''நாயனுர்''** ஆழ்வார், அடிகள் வள்ளல்கள், ஞானிகள் முனிவர்கள், இருடிகள் .........என்று பகுத்துப் பகுத்துப் பாராட்டியிருக்கிருர்கள். இதுபற்றி மிகப் தெளிவான எழுதாக்கிளவி நூல்கள் நிறைய உள்ளன, எழுதப்பட்டு பாரம்பரியமாகப் பாதுகாக்கப்படும் நூல்களும் உள்ளன இவற்றின் அடிப்படையில்தான் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினேராவதுபதினெண் சித்தர்பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரி யாற்றங்கரைக் கருவூரார் அவர்களும்; அவரது மகன் கருவூர்த் தேவர் அவர்களும்: பேரன் திருமாளிகைத் தேவர் அவர்களும் சங்க இலக்கியங்களைத் தொகுத்தது போல் தமிழகத்தில் தோன்றிய அருளாளர்களைத் தொகுத்து 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் என்று இருபெரும் தொகையினரை அறிவிப்புச் செய்தார்கள் அதற்குப் பிறகு ஏறத்தாழ ஓராயிரமாண்டுகள் இடை வெளியில் தோன்றிய சித்தர்களில் யாரும் இந்த அருளாளர் தொகைப்பட்டியலை தொகுக்கும் முயற்சியில்ஈடுபடவே இல்லை. ஆனுல், பல நாயனுரும், ஆழ்வார்களும் தோன்றியிருக்கிருர்கள் என்ற ஐயமே இல்லை. எனவே அருள் உலகத்துக்கு ஈடு செய்ய முடியாத ஒரு மாபெரும் இழப்பு ஏற்பட்டுவிட்டது. இந்த இழப்புக்கு ஈடு செய்யும் மாபெரும்முயற்சியில் இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர்

அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அம்மாபெரும் முயற்சி நிறைவு பெற இன்னும் பல ஆண்டுகள் ஆகும். ஏனென்றால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரை சமயவரலாறோ, சமுதாய வரலாறோ, அரசியல் வரலாறோ, கலை வரலாறோ, இலக்கிய வரலாறோ, முறையாக இல்லை! நிறைவாக இல்லை! தெளிவாக இல்லை! காலக் கணக்கீட்டு அடிப்படையில் இல்லை! கற்பனையும் கனவும் கலக்காமல் இல்லை! எனவே, உண்மை அருளாளர்களின் பட்டியலைத் தயாரிப்பதும் அவர்களை வகைப்படுத்துவதும் பொறுப்போடும் பொறுமையோடும் தொடர்ந்து பலகாலம் முயன்று செய்யப்பட வேண்டியது ஒன்றாகும்,

இருந்த போதிலும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியத் தலைவர். பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, இராசி வட்ட நிறைவுடையார், குருதேவர், ஞானகுரு, அரசயோகி, ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசக்தி திருவடி, அண்டபேரண்ட ஆதிசக்திகள் சன்னிதானம், இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் தம் காலத்தில் வாழ்ந்த ஈடு இணையற்ற, ஒப்புயர்வற்ற, தன்னிகரற்ற, தன்னலமற்ற, துணிவுமிக்க, பணிவுநிறைந்த மக்கள் தொண்டர், தமிழினத் தலைவர், தமிழ் மொழிச் சீர்திருத்த மேதை, தமிழ்ச்சமுதாயச் சீர்திருத்த மாவீரர், பகுத்தறிவுப் பகலவன், சிறைக்கு அஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், தன்மானத் தந்தை, பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைப் பாராட்டிட வேண்டிய நன்றிக் கடனின் பொருட்டுஅவரை 64வது நாயனாராக, சொல்லடி நாயனாராக அறிவிப்புச் செய்திருக்கிறார். இந்த அறிவிப்பு மிகவும் நேர்மையானது உண்மையானது நன்மையானது நிலையான பயனுக்குரியது. ஏனெனில். தமிழனாய் பிறந்த ஒவ்வொருவரும் தன்னுடைய தன்மானத்தையும், இனத்தின் மானத்தையும், மொழியின் உரிமையையும், நாட்டின் ஒற்றுமையையும் நினைவுபடுத்தி, வளப்படுத்தி



வலிமைப்படுத்திச் சென்ற பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்கு வாழ்நாள் முழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றான். எனவேதான். பெரியார் ஈ.வெ.ரா. தமிழினம் பட்டியலிட்டு வழிபடுகின்ற 63 அருளாளர்களோடு சேர்த்துப் பட்டியலிடப்பட்டிருக்கிறார். அதாவது தமிழர்கள் அனைவரும் தாங்கள் வழிபடும் தெய்வங்களுள் ஒருவராக பெரியார் ஈ.வெ.ரா. வை என்றென்றும் ஏற்றுப் போற்றிப் புகழ்ந்திட வேண்டும் என்பதே நமது குருதேவர், குருமகா சன்னிதானம். ஞால குருசித்தர் கருவூரார் அவர்களின் செயல் திட்டம்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மதமறுப்பாளராகவும் வெறுப்பாளராகவும், எதிர்ப்பாளராகவும், நாத்திகராகவும் செயல்பட்டிட்டவர் என்பதால் அவரை எப்படி அருளாளர்களின் பட்டியலில் சேர்க்கலாம் என்று சிலர் தயங்கவும் கலங்கவும்மயங்கவும் நேரிட்டிடுகின்றது. இவர்கள் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளையும் படித்தறிவார்களேயானால் பெரியார் ஈ.வெ.ரா.வும் மேற்படி 63 நாயன்மார்களைப் போல ஒரு மக்கள் தொண்டரே என்பதையும் புரிந்து கொள்வார்கள். மேலும், மேற்படி 63 நாயன்மார்களும் அவரவர் காலத்தில் பரந்து பட்ட தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சிலபகுதிகளில் மட்டுமே செயல்பட்டுச் சென்றிருக்கிறார்கள் என்ற பேருண்மை விளங்கிடும். ஆனால் பெரியார் ஈ.வே.ரா. வோ தமிழகம் முழுவதும் செயல் பட்டிருக்கிறார்; உலகமுழுதுமுள்ள தமிழர்களின் உள்ளங்களையும், இல்லங்களையும் சிந்திக்கச்செய்திருக்கிறார். எனவே, மக்கட் தொண்டர்களின் வரிசையில் இடம் பெறுகின்ற தகுதி பெரியார் ஈ.வெ.ரா. வுக்கு உண்டு! உண்டு!! உண்டு!!!.

63 நாயன்மார்களும் செயல்பட்டு உருவாக்கிய மதச் செழுச்சியை விட விழிச்சியைவிட எழுச்சியைவிடவளர்ச்சி

யைவிட தனிமனிதராகப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தமது மதமறுப்பு, வெறுப்பு கருத்துக்களின் மூலம் பல நூருயிரம் மடங்குப் பெரிய அளவில் மத உணர்வுச் செழுச்சியைவிழிச்சியைஎழுச்சியைஉருவாக்கியிருக்கிருர்! உருவாக்கியிருக்கிருர்!உருவாக்கியிருக்கிருர்! இதனை என்றைக்குமே எவராலுமே மறுக்கவே முடியாது! முடியாது! முடியாது! அதாவது, பெரியார் ஈ. வெ. ரா. வின் நாத்திகக் கருத்துக்களால் தான் ஆத்திகப் பெருமக்களிடையே பற்றும், பாசமும், நட்பும், ஒற்றுமையும், தோழமையும் வளப்பட்டு வலிமைப்பட்டன அதனுல் இருளடைந்திருந்த கோயில்கள் ஒளி பெற்றன! இடிபாடுகள் மிகுந்து கேட்பாரற்று பாழடைந்து கிடந்த கோயில்கள் செப்பனிடப்பட்டு பொழிவு மிகுந்தன! எங்கு பார்த்தாலும் புதிய புதிய கோயில்கள் கட்டப்பட்டு வருகின்றன! மத மறுமலர்ச்சிக்காகப் புதியபுதிய நிறுவனங்களும், தலைவர்களும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றனர். நாட்டில் மத நம்பிக்கையும், மதப்பற்றும், மதஉரிமைகளும் கிளர்ச்சி அடைந்து போராடுகின்ற நிலையை அடைந்திருக்கின்றன. இவை யனைத்தும் பெரியார் ஈ.வெ.ரா. வின் சாதனையே! சாதனையே! சாதனையே! அதாவது, பல்லாயிரக்கணக்கான இந்துமதத் தலைவர்களால் உருவாக்க முடியாத இந்துமத உணர்வு, விழிச்சி, எழுச்சி. செழுச்சி, கிளர்ச்சி நிலைகள் பெரியார் ஈ.வெ.ரா. என்கின்ற ஒரு தனி மனிதரால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்து அரிய, பெரிய, சீரிய, நேரிய, கூரிய மாபெரும் உண்மையினை இந்து மதத்தவர்கள் ஒரு நொடிப்பொழுதாவது எண்ணிப் பார்பார்களே யானுல் உடனே தந்தைபெரியார் ஈ.வெ ரா. அவர்களின் திருவுருவப் படத்தை தமது பூசையறையில் மாட்டிடுவார்கள். பெரியார் ஈ வெ ராவின் சிலைகளைக் காணும் பொதெல்லாம் கோயிலில காணும் பத்தர்களைப் போல் பணிவோடு நின்று கனிவோடு தலைதாழ்த்திக் கைகட்டிக் கொண்டாடி விட்டே செல்வார்கள். இன்னும் சொல்லப்



போனுல் எல்லாக்கோயில்களிலும் உள்ள 63 நாயன்மார்களின் சிலைகளின் வரிசையில் 64 வது நாயனுர் சிலையாக உடனடியாகப் பெரியார் ஈ. வெ. ராயின் சிலையை வைத்திடுவார்கள்.

பெரியாரைப்பற்றி இவ்வளவு பெரிய உண்மையினை அரசு நடத்திய நூற்றாண்டு விழாவில் கூற நமது குருதேவருக்கு வாய்ப்புதரப்படவேயில்லை. பெரியாரை ஓர் அவதாரமாக அறிவிக்கும் நேரடிச் செயலிலேயே அவருடைய தொண்டர்கள் அவருக்கு ஆண்டு முழுவதும் நாட்டின் ஏதாவது ஒரு மூலையிலாவது பிறந்தநாளும் இறந்தநாளும் [நினைவு நாள்] கொண்டாடிக் கொண்டேயிருக்கிருர்கள். இந்தக் கொண்டாட்டங்களில் கோயில் கோயில் திருவிழாக்களில் கடவுள் சிலைகளை அலங்கரிப்பதைவிட பெரியாரின் படத்துக்கும் சிலைக்கும் அலங்காரம் செய்கிருர்கள் மேலும் கோயில்களிலே பூசைக்குப் பயன்படுத்தி பக்தர்களுக்கு வழங்கும் பொங்கல் பலகாரங்களைவிட பெரியாருக்காக நடத்தப்படும் விழாக்களில் ஏராளமான மக்களுக்குத் தாராளமான பொங்கல்பலகாரங்களும் வடை பாயசத்தோடு சாப்பாடும் போடப்படுகின்றது! போடப்படுகின்றது! போடப்படுகின்றது! இது, பெரியார் ஈ வெ. ராவை அவரது சீடர்களே கடவுளாக மாற்றி வருகிருர்கள் என்பதாகும். மேலும் குருதேவர் அவரை 64 வது நாயனுர் என்று அறிவித்ததுமட்டும் சரியில்லை என தெரிவிக்கும் அவர்கள் திருநீறு குங்குமம் மட்டுமே கொடுக்காது மற்ற அனைத்தையும் வழங்கி விழாவை நடத்துகிருர்கள். இப்படி இருக்கும்போது நமது குருதேவர் பெரியார் ஈ.வெ. ராவை 64 வது நாயனுராக அறிவிப்பு செய்ததை தமிழன் என்று இருக்கக்கூடிய ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றேயாகும். சிலர் பெரியார் ஈ. வெ. ராவை நாயனுர் என்று அறிவிப்பதால் அவர் ஆற்றிய பகுத்தறிவு தொண்டு சமுதாயத்தொண்டு சமயத்தொண்டு, சமயச் சீர்திருத்தம் முதலியவை முடி

மறைக்கப்பட்டு விடுமென்று கூறுகிறுர்கள். ஆனல் இது முற்றிலும் தவறு தவறு தவறு. பெரியார் ஈ.வெ.ரா வை நாயனர் என்று அறிவிப்பதன் மூலம்தான் அவருடைய வாழ்கை வரலாற்றையும் ஆற்றிய பணியினையும் என்றென்றும் அனைவரும் தெரிந்து கொள்ளக்கூடிய இறவாத இலக்கியங்களாக புராணங்களாக இதிகாசங்களாக வரலாறுகளாக ஆக்க முடியும்! முடியும்! முடியும்! மேலும் பகுத்தறிவுப் பகலவனை வாழ்ந்து சென்ற தன்னிகரில்லாத தலைவர் பெரியார் ஈ.வெ ரா வின் வரலாற்றையோ வாழ்க்கைப் பணிகளையோ யாரேனும் மூடி மறைக்க முடியும் என்று எண்ணுவதே மடமை! அறியாமை! கேலிக்குரியது! கண்டிப்புக்குரியது! இந்த நாட்டில் பெரியார் ஈ. வெ. ரா. இமயமலை யென என்றென்றும் இருந்தே தீருவார்! தீருவார்! தீருவார்!

இந்தப் பேருண்மையினை குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களின் அழகு மொழியில் கூறவேண்டுமென்றுல் ''......இத்திரு நாட்டிலுள்ள இல்லங்களில் சில இல்லங்கள் பெரியார் ஈ. வெ.ரா.வின் திருவுருவ படத்தைப் பெருமல் இருக்கலாம். அல்லது வைத்து அழகு பார்க்காமல் இருக்கலாம் ஆனல், 'இத்திரு நாட்டில் பெரியார் ஈ.வெ. ரா.வை நினைத்து அவர் ஆற்றிய பணிகளின் பயனையும் அழகையும் எண்ணிப் பார்க்காத உள்ளங்களே இருக்க முடியாது! முடியாது! முடியாது! எனவே, இன்றைய இளைய தலைமுறையினருக்கும் வருங்கால சந்ததியினருக்கும் ஒரு மாபெரும் வழிகாட்டி, வாழ்க்கைத்துணை, தத்துவ மேதை, பகுத்தறிவு வாதி, பேரறிஞர் ஒருவர் உண்டு என்றுல் அவர் ''தந்தை பெரியார் ஈ. வெ. ரா ''வாகத்தான் இருக்க முடியும்! முடியும்! முடியும்! ...'' இவ்வாசகம் போன்று எண்ணற்ற சொல்லழகும் பொருளாழமும் மிக்க வாசகங்கள் எண்ணற்று வழங்கப்பட்டிருக்கின்றன நமது குருதேவரால் என்பதனை எண்ணிப்பார்க்கும் நம்மவர்களால் நமது குருதேவர் பெரியார் ஈ.வெ. ரா.வை ஏன் 64 வது



நாயனராக அறிவித்தார் என்பதனைப் புரிந்துகொள்ள முடியும். எனவே, நம்மவர்கள் குருதேவர் பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டில் அறிவித்த இந்த அறிவிப்பை நன்கு விளம்பரப்படுத்த வேண்டும் பெரியாரை வைத்து லாபம் சம்பாதிப்பவர்கள்தான் நமது குருதேவரின் கருத்தை மறுப்பார்கள் வெறுப்பார்கள் அதைப்பற்றி நாம் கவலை படத் தேவையில்லை.

பெரியார் ஈ வெ. ரா. தன் வாழ்நாள் முழுவதும் ஓர் உண்மையான கொள்கைப் பற்றும், குறிக்கோள் நம்பிக்கையும் மிகுதியாகப் பெற்றிருந்த வீரத் தலைவராகவே வாழ்ந்தவர் என்பதில் ஐயமே யில்லை- யாரோ சிலர் தவருகக் கூறுவது போல பெரியார் ஈ. வெ. ரா. வுக்கு ஆத்திகத்தில் நம்பிக்கை இருந்தது என்று கூறுபவர்களல்ல நமது குருதேவரும் நாமும். இதனை நமது குருதேவரின் வாசகமாகக் கூற வேண்டுமென்றுல் ''...இம் மண்ணுலகில் தோன்றிய நாத்திகர்களிலேயே மிகவும் முழுமையான நிறைவான முதன்மையான வீரமிக்க தீரம் நிறைந்த நாத்திகர் தந்தை பெரியார் ஈ. வெ. ரா தான். இவர் ஆரம்பம் முதல் கடைசி வரை தனது நாத்திகக் கொள்கையில் ஆழமான நம்பிக்கையும் அழுத்தமான பிடிப்பும் பெற்றிருந்தார். இது பற்றி ஐயப்படுபவர்கள் அல்லது திருத்திக் கூறுகிறவர்கள் சிந்தனைச் சிற்பி பெரியார் ஈ வெ ராவைப் புரியாதவர்களே! புரியாதவர்களே! புரியாதவர்களே!...'? என்ற இந்த நமது குருதேவரின் வாசகத்தை மட்டும் இங்கே குறித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பெரியார் ஈ. வெ. ரா. நாத்திகத்தின் எல்லையாக விளங்கினர் நமது குருதேவரோ ஆத்திகத்தின் எல்லையாக விளங்குகிறுர். எனவேதான், இருவரும் ஒருவரையொருவர் புரிந்து, விரும்பி, ஏற்று, ஒப்புக்கொண்டு செயலாற்ற முடிகின்றது.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மதத்தை மறுத்த

போதிலும், வெறுத்த போதிலும், எதிர்த்த போதிலும் அவர் மதத் துறைக்கு ஆற்றியுள்ள ஈடு இணையற்ற யாருமே ஆற்ற முடியாத அல்லது நினைத்துப் பார்க்காத பயன்மிகு நன்மைகள் பல உண்டு உண்டு உண்டு அவற்றுள் ஒன்றிரண்டு குறப்பிட்டுச் சொன்னால் போதும் என்று எண்ணுகிறேன்.

1. எல்லோரும் கோயில் கருவறைக்குள் சென்று கடவுளை வழிபடும் உரிமை வேண்டுமென்று போராடியது.

2. எல்லர் சாதியைச் சார்ந்தவர்களும் கோயிலில் பூசாறி களாக, குருக்களாக, அர்ச்சகர்களாக... பணியாற்ற சமவாய்ப்பு வேண்டுமென்று போராடியது

3. எல்லாக் கோயில்களிலும் தமிழ் மொழி தான் பூசை மொழியாக, அருட்சினை மொழியாக, மத மொழியாக, சாத்திற மொழியாக, சடங்குகளைச் செய்யும் மொழியாக, கடவுள் மொழியாக இருக்கவேண்டுமென்று போராடியது—இம் மூன்றையும் எண்ணிப் பார்க்கும் மிகச் சாதாரண அறிவு படைத்தவர்கள் கூட, பெரியார் ஈ. வெ. ரா அவர்கள் மத மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட ஒரு பெரியவர் என்பதை ஒப்புக் கொள்வார்கள். எனவே மேற்கூறிய மூன்று காரணங்களே போதும் நமது குருதேவர் பெரியார் ஈ.வெ ரா.வை ஒரு நாயனர் என்று அறிவித்தது சரியானதுதான் முறையானதுதான் என்று நிறுவிட அல்லது வாதிட. எனவே, நம்மவர்கள் இனி மேலாவது நமது குருதேவர் பெரியார் ஈ வெ.ரா வை 64வது நாயனராக ''சொல்லடி நாயனா'' என்று அறிவித்ததைப் பற்றி யார் எத்தகைய ஐயத்தை கேட்பவர்களானலும் உடனே விளக்கமளிப்பவர்களாக இருக்க வேண்டும் ஏனென்றல், நமது குருதேவர் தாம் உருவாக்கும் ஒவ்வொருவரும் தமது சாதனைகளுக்குச் சாட்சியாக, ஊன்ருக, தெளிவான 'விளக்கமாக இருகக வேண்டுமென்ற அறிவிப்பை ஆரம்ப கால முதல் வழங்கி வருகிறர்.



64 நாயன்மார்களில் இறைவனை கல்லால் அடித்துப் பூசை செய்த ஒரு நாயனர் ''கல்லடி நாயனர்'' என்று பாராட்டப் படுகிறர். இந்த மரபை ஒட்டித்தான் நமது குருதேவர் இறைவனை சொல்லால் அடித்து இறைமை யுணர்வை விழிச்சியும் எழுச்சியும் செழிச்சியும் மறுமலர்ச்சி யும் பெறச் செய்த பெரியார் ஈ.வெ ரா வை ''சொல்லடி நாயனர்'' என்று சிறப்பித்திருக்கிறர். எனவே, இனிமேல் தமிழினம் காத்த பகுத்தறிவுப் பகலவன் பெரியார் ஈ.வெ. ரா. அவர்களை 'அறுபதது நான்காவது நாயனராகத் திரு அவதாரம் செய்த சொல்லடி நாயனர் பெரியார் ஈ. வெ. ரா. என்றே குறிக்க வேண்டும். இதுவே, நாம் நமது குருதேவருக்கும் இந்து மதத்திற்கும் ஆற்றுகின்ற நன்றிக் கடன். ஏனெனில், நமது குருதேவர், 'இந்துமத வரலாறு என்னும் நெடுஞ்சாலையில் பெரியார் ஈ வெ.ரா. ஓர் எல்லைக்கல் அல்ல; அவர் ஒரு வழிகாட்டி மரம்'—என்ற கருத்தையே தொடர்ந்து கூறிவருகிறர். இதன் படி பார்த்தால் இந்த நூற்றண்டில் இந்து மத மறுமலர்ச்சி பற்றிய வரலாறும் முயற்சியும் பெரியார் ஈ.வெ ரா. இல்லாமல் முழுமை பெறவே முடியாது! முடியாது! முடியாது! என்பது தான் உண்மை. எனவே, ''நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கௌரவத் தலைவராக அறிவிக்கப்படும் தகுதி பெரியார் ஈ. வெ. ரா. ஒருவருக்குத்தான் உண்டு''—என்று நமது குருதேவரின் தந்தை கூறிய கருத்தையே நமது குருதேவரும் கூறுவதை நாமும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

எனவே வாழ்க பெரியார் ஈ. வெ. ரா!

வளர்க பெரியார் சிந்தனை! தொடர்க பெரியாரின் அறிவுப் பணி! என்ற முழக்கங்களை நாமும் முழக்குவோமாகுக!

## செயல் திட்டம்

தமிழர்கள் அனைவரும் தங்களின் தன்மானம், இனம், மொழி, நாடு, உரிமைகள்.. ......முதலிய அனைத்தையும் தள்ளாத வயதிலும் தளராமல் தன்னம்பிக்கையோடும் தன்னலமின்றியும் பாடுபட்டுக் காத்துக் கொடுத்த பகுத்தறிவுப் பகலவன், சீர்திருத்த மாவீரன், சிந்தனைச் சிற்பி தந்தை பெரியார் ஈ வெ ரா. அவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்தியேயாக வேண்டும். இதற்காகக் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் முதல் கட்டமாகச் செயல் திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

1. அருள்மிகு சொல்லடி நாயனர் பெரியார் ஈ. வெ. ரா. வார வழிபாட்டு மன்றங்கள் ஊர்தோறும் தொடங்கப்படல் வேண்டும்.

2. இம் மன்றத்தில் சமசுக்கிருத மொழி (மந்திரங்களுக்கு) தோற்றுவிக்கப்படுவதற்கு பல நூருயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய பைந்தமிழ் மந்திரங்களில் பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும் இதனல் பெரியார் ஈ. வெ. ரா. கனவு கண்டதுபோல் கருவறைக்குள் அனைவரும் சென்று வழிபடல், கருவறையில் தமிழ் மொழி ஆட்சி பெறல், சாதி வேறுபாடின்றி அனைவரும் அருட்சினை செய்யும் குருக்களாக மாறல்.........முதலிய திட்டங்கள் செயலாகும்.

3. தமிழர்களின் தாழ்வு மனப்போக்குகள் மாறித் தன்னம்பிக்கையுணர்வும், தன்மான உணர்வும், இன உணர்வும், மொழி உணர்வும், நாட்டுணர்வும் தழைத்துச் செழித்திடும். அதனல் தமிழன் பிறர் காலில் விழுதலும்; தமிழனை பிறர் சுரண்டுதலும் முழுமையாகத் தடுக்கப்படும்! தடுக்கப்படும்!! தடுக்கப்படும்!!!

வாழ்க தந்தை பெரியார் ஈ. வெ. ரா.!!!
வளர்க பெரியார் நெறி!!
வெல்க பெரியார் குறிக்கோள்!





''.. நண்பா! நமது இயக்கம் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு வருகின்ற ஒன்று எனவே தான், இந்த இயக்கத்தால் தன்னலங் கருதாது இறுதி வரை தளராது பாடுபட்ட தமிழினத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நாத்திகக் கருத்துக்களை மிகுதியாகப் பேசிச் செயல் பட்டிட்ட போதும்; அவர், ஓர் ஆத்திகத்தலைவரே என்ற பேருண்மையை நிலை நாட்ட முடிந்தது. அதாவது கி பி. 6ஆம் (ஆறு) நூற்றுண்டின் இறுதி அல்லது 7ஆம் (ஏழு) நூற்றுண்டின் முற்பகுதிக் காலத்தில் வாழ்ந்த ஆதிசங்கரர் புத்த மதத்துக்கும் சமண மதத்துக்கும் பதில் தருகிற வண்ணம் **'மனீசாப் பஞ்சகம்'** என்ற பெயரில் ஐந்து சுலோகங்களைக் கொண்ட ஒருநூலை எழுதித் தமது பணியை நிறைவு செய்தார். இந்தநூலில், (**'மனீசாப் பஞ்சகம்'**) ஆதிசங்கரர்:–

1. கடவுளை எதிர்ப்பது
2. கடவுள் இல்லை என்று மறுப்பது
3. மதச் சின்னங்களை அணிவது தவறு என்பது
4. உருவ வணக்கம் தவறு என்பது
5. சாதிகளை எதிர்ப்பது

......எனப்படும் ஐந்து கொள்கைகளை விள கியுரைத்து நிலைநாட்டியிருக்கிருர். **இதே கருத்துக்களை விளக்குவதிலும், செயலாக்குவதிலும்தான் பைந் தமிழர் நலப் பாதுகாப்புப் போர்ப் பாசறையும்; பகுத்தறிவுப் பகலவனுமான வெண்தாடி வேந்தர் பெரியார் ஈ. வெ. ரா. தம் வாழ்வைச் செலவிட்டார் எனவே**

தான், இவரை ஓர் ஆத்திகத்தலைவர் என்று ஒப்புக்கொண்டோம் யாம். அதற்கு அடையாளமாகப் பெரியார் ஈ.வெ.ரா. வை (64) அறுபத்து நான்காவது நாயனாராகத் திருஅவதாரம் செய்திருக்கும் 'சொல்லடி நாயனார்' என்று அறிவிப்புச் செய்துள்ளோம் இதனடிப்படையில்தான், "...உடனடியாக எல்லாப் பத்தர்களும் இவருடைய படத்தைத் தங்களின் பூசையறைகளில் வழிபாட்டுக்குரியதாக ஆக்கிடல் வேண்டும். அடுத்து எல்லா கோயில்களிலும் அறுபத்து மூவர் சிலைகளின் வரிசையில் தமிழினத்தலைவர் பெரியார் ஈ வெ ராவின் சிலையை 64-வது நாயனார் சிலையாக நிறுவிப் பூசைகளைச் செய்ய வேண்டும். இனிமேல் 'அறுபத்து மூவர் விழா, என்ற பெயரில் கொண்டாடப்படும் விழாவை 'அறுபத்து நால்வர் விழா' என்ற பெயரில்தான் கொண்டாடல் வேண்டும்'' என்ற அறிவிப்புக்களையும் தொடர்ந்து வழங்குகிறோம் யாம். இதன்படி, நமது இயக்கத்தவர் ஆங்காங்கே 'சொல்லடி நாயனார் பெரியார் ஈ வெ.ரா.'வின் பெயரால்

a) வார வழிபாட்டு மன்றம்
b) சமுதாயச் சீர்திருத்த மன்றம்
c) பகுத்தறிவு வளர்ச்சி மன்றம்
d) மதச் சீர்திருத்த மன்றம்
e) தமிழ் இலக்கிய மன்றம்
f) கலை வளர்ச்சி மன்றம்
g) சொற் பயிற்சி மன்றம்

......என்று பல மன்றங்களை உருவாக்கிச் செயல்படுகிறார்கள். தாங்களும் இதன்படியே செயல்படல்வேண்டும்.

**சிறப்புக் குறிப்பு:-**

**''ஆதிசங்கரர் 'மனீசாப் பஞ்சகம்' என்ற நூலின் மூலம் வழங்கிய கருத்துக்களையே; பெரியார் ஈ. வெ. ரா. வாக மறுபிறப்பெடுத்துச் செயலாக்கினார்'' ; — என்ற கருத்தே!**



இன்றைக்கு மலை முகடு முதல் அலைகடலிடைத்தீவு வரை வாழும் அருளாளர்களின் கருத்தாக இருக்கிறது. எனவே தான், ''பெரியார் ஈ. வெ. ரா. ஆதிசங்கரரின் மறுஅவதாரமே' என்ற தலைப்பில் 'பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு-சித்தர் கருவூரார் என்ற முறையில் அருளுலக அறிவிப்புகளையும் வழங்கி வருகிறோம் யாம். ஆனால், நாத்திகத் தலைவரை ஆத்திகத் தலைவரின் மறு அவதாரமாகக் கூறுவதை எல்லோராலும் புரிந்து விருப்பி ஏற்க முடியவில்லை. ஆனால், யாம், குருதேவர், அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் அரசயோகி, ஞானகுரு, இராசிவட்ட நிறைவுடையார்... ... ...என்று இம்மண்ணுலகில் இதுகாறும் எவருமே பெற்றிராத அருட்பட்டங்களைப் பெற்றிருந்தும்: M.A,(Ph.D.) வரை படித்திருந்தும்; ஒரு மாபெரும் புரட்சிச் சிங்கத்தால் வளர்க்கப்பட்டிருந்தும்; உலக மத ஆய்வுக் குழுவின் தலைவராக இருந்தும்........ 'உலக அருளாளர்களின் கருத்தை' வெளியிடத் தயங்குதலோ! மயங்குதலோ! கலங்குதலோ! பின் வாங்குதலோ! ......தவறுகும் எனவே, தங்களைப் போன்ற இந்துமத மறுமலர்ச்சிப் பணி ஆர்வலர்கள் எமது அறிவிப்புகளைச் சிந்தித்துப் புரிந்து தெளிந்து உலகுக்கு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளையே இறுதியாக விடுக்கிறோம் யாம்......''

—ஞாலகுரு சித்தர் கருவூராரின் எழுத்துக்
குவியல்களிலிருந்து எடுக்கப்பட்ட கருத்து—

# ஆதிசங்கரரின் அவதாரமே பெரியார் ஈ. வெ. ரா.

இளமுறியாக் கண்டத்தில் பதினெண் சித்தர்கள் தமிழ் மொழி வழியாகப் படைத்த இந்து மதத்தைக் காத்த ஆதி சங்கராச்சாரியாரின் மறு அவதாரமே இந்து மதச் சீர் திருத்த வீரர் பெரியார் ஈ. வெ. ரா. புத்த மதமும் சமண மதமும் நாத்திக வாதத்தால் அப்பாவி இந்துக்களை மத மாற்றம் செய்தது. காலப் போக்கில் இந்துமதச் சடங்குகளும் சம்பிரதாயங்களும், விழாக்களும் எண்ணிக்கையில் அதிகமாகவும்; செயலில் ஆடம்பரமாகவும்; ஏட்டறிவு இல்லாத பாமரர்களால் புரிந்து கொள்ள முடியாதனவாகவும் ஆகிவிட்டன. இதனைப் பெரிது படுத்தி 'மடமை' 'ஏமாற்று' சுரண்டல்'......என்று விமர்சித்து இந்துக்களைக் கலக்கி மயக்கி மதமாற்றம் செய்தன, மாற்று மதங்கள். அப்பொழுது, ஆதிசங்கரர் சித்தர்களின் படைப்பான இந்து மதத்தை நாத்திகவாதத்தாலேயே வென்றிடப் பாடுபட்டார். அதாவது, 'முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும். என்ற தத்துவத்தை உருவாக்கினர். இதனை அவரின் 'மனீசாப்பஞ்சகம்' என்ற நூல் விளக்குகிறது இந் நூலே இவரெழுதிய கடைசி நூல்; இதில் ஐந்து சுலோகங்களே இரத்தினச் சுருக்கமாக உள்ளன. அவை விளக்கும் ஆழமான தத்துவங்களே சித்தர்களின் இந்து மதத்தை (விந்து--▷ என்ற சொல்வழியாகப் பிறந்த இந்து என்ற சொல்லுக்கு நாற்பத்தெட்டுப் பொருள்கள் உண்டு. காலப் போக்கில் நூற்றுக்கு மேற்பட்ட பொருள்களை உடைய ஓர் அழகிய பொருளாழமிக்க தமிழ்ச் சொல்லாகவே 'இந்து' என்ற சொல் விளங்குகிறது. வாய்மை, தூய்மை, உய்வு, உயர்வு, உயிர், ஆவி, ஆன்மா, அன்பு, அமைதி, அழகு, இனிமை, கனிவு, முதிர்ச்சி, பாசம், நட்பு' தோழமை, ஒற்றுமை, சமத்துவம், காதல், மென்மை' சமாதானம், இரக்கம், பசுமை, கொழுமை, வலிமை, வளர்ச்சி



மலர்ச்சி, பிறப்பு, ஆரம்பம்... என்று எண்ணற்ற பொருள்கள் 'இந்து' என்ற பழந்தமிழ்ச் சொல்லுக்குக் கூறப் படுகின்றன. இந்த ஒரு சொல்லே தமிழ்மொழி, தமிழினம், தமிழ் நாடு, தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம்'...என்பனவற்றின் வாழ்வியலையும் வள வளர்ச்சி வரலாற்றையும் விளக்குகிற சிறந்த சான்றாக ஊன்றாக விளங்குகிறது. இந்து மதத்தின் புராண இதிகாசங்களும் சாத்திர தோத்திர நேத்திர அத்திர சூத்திரங்களும்......மிக மிகச் சிறந்த தெளிவான வலுவான உண்மையான வரலாற்றுச் சான்றுகளே! ஊன்றுகளே!. இப்பேருண்மைகளை உணர்ந்தே இந்து மதத்தைக் காக்க, மறுமலர்ச்சியடையச் செய்ய இந்து மதம் ஒரு சமூக விஞ்ஞானமே, (The Induism is a social Science) என்ற பேருண்மையைச் செயல் வடிவில் விளக்கும் ஆயிரமாயிரம் அருளாளர்களின் பெரும்படையே இந்த இயக்கம்.] 'மாற்று மதத்தவரின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றிட்டது. இப்பொழுது 'கிருத்துவம்' 'இசுலாம்' என்ற இரண்டு மதங்களும் இந்து மதத்தை வேட்டையாடுகின்றன. முன்பு போல ஆதிசங்கரர்; இந்து மதத்தைக் காப்பாற்ற நாத்திக வாதத்தையே ஆயுதமாகக் கொண்டு பெரும்போர் நிகழ்த்திட ஒரு மாபெரும் பகுத்தறிவுப்படையை உருவாக்கிடப் பெரியார் ஈ. வெ. ரா. வாகத் திரு அவதாரம் செய்திட்டார், இம்மாபெரும் பேருண்மை ஆதிசங்கரரின் கடைசி நூலான 'மனீசாப்பஞ்சகம்' விளக்கும் தத்துவங்களால் தெளிவாகிடுகிறது.

**மனீசாப் பஞ்சகம் கூறும் தத்துவச்சாரம்:-**

1. கடவுளை எதிர்ப்பது
2. கடவுள் இல்லை என்று மறுப்பது
3. மதச் சின்னங்களை அணிவது தவறு என்பது
4. உருவ வணக்கம் தவறு என்பது
5. சாதிகளை எதிர்ப்பது.

இந்தக் கொள்கைகளைக் காவிக் கட்டிக் கொண்டு இமயம் முதல் குமரிவரை கூறிய ஆதிசங்கரர்தான்; இந்த நூற்றாண்டில் கருப்புஉடை அணிந்து கொண்டுவேங்கடம் முதல் குமரி வரை கூறினார் இதில் எள்முனையளவு கூட எவரும் ஐயப்படவே தேவையில்லை ஏனெனில், தமிழினத்தின் தன்மானங்காக்கத் தள்ளாத வயதிலும் தளராத தன்னம்பிக்கையோடு தன்னலமின்றி மதமறுப்பு, மத எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு உருவ வழிபாட்டுக்குரிய கோயில் வெறுப்பு, மதச்சின்னங்களை அணிவதற்கு எதிர்ப்பு..... முதலிய கொள்கைகளை ஆணித்தரமாக விளக்கிப் பாடுபட்டவரே வெண்தாடி வேந்தர் பெரியார் ஈ வே ரா. இவர், இப்படிப் பாடுபட்டதால் தான் ஆழ்ந்த உறக்கத்திலும், மயக்கத்திலும். தயக்கத்திலும் தேக்கத்திலும், ஏக்கத்திலும், கலக்கத்திலும்... செயலற்றிருந்தஇந்துமதம் வீறுபெற்று எழுந்தது இந்து மத வரலாறும் புராண இதிகாச விளக்கங்கள்; சாத்திர, தோத்திர, நேத்திர, அத்திர, சூத்திர, சம்பிரதாயச் சடங்குகளும் மரபுகளுக்கு உரிய தத்துவ நோக்கங்கள்... முதலியவை எங்கும் முழங்கப்படும் மதமறுமலர்ச்சிப் பணிகள் வளர்ச்சி பெற்றன. பாழடைந்த கோயில்கள் பழுது பார்க்கப்பட்டுக் கூட்டங்கள் நிரம்பி வழியும் பக்திச் செழுச்சி உருவாயிற்று. மதமாற்றம் தேவையற்றது பயனற்றது பொருளற்றது எல்லாமதங்களுக்கும் மூலமாக,முதலாக,தாயாக இருப்பதுதான் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்' எனப்படும் இளமுறியாக் கண்டத்தில் பிறந்த இந்து மதம். இந்த இந்து மதத்தில் தான் 'பசு' 'பதி' 'பாசம்' என்ற ஒப்புயர்வற்ற, ஈடு இணையற்ற எம் மதத்திலும் இல்லா 'மதக் கொள்கை' இருக்கிறது மேலும்'மனித வாழ்வுத் தத்துவமாக' எந்த மதமும் கூறிடாத 'ஆவி' 'ஆன்மா' 'உயிர்' என்ற முப்பெரும் மானுடத் தத்துவம் இந்த இந்து மதத்தில் தான் இருக்கிறது. இவற்றிற்குச் செயல் வடிவமாகப் 'பழம்பிறப்புணர்தல்' 'பழம் பிறப்புணர்த்துதல்', 'இப்பிறவியினை உணர்தல்,



உணர்த்துதல்', 'மறுபிறவிகளை உணர்தல், உணர்த்துதல்' பிறவாமைபெறுதல்,' 'உருவ, அருவ அருவச்சித்திகளைப் பெறல்' 'பயிரின உயிரினச் சித்திகளுக்கு வழிவகைகள்'..முதலியன இந்துமதத்தில் தான் இருக்கின்றன. .. என்பன போன்ற பேருண்மைகள் இந்து மதப் பரப்புநர்களாலும் புரியப்படும் இந்து மத மறுமலர்ச்சி நிலைகள் வளர்ந்து விட்டன. எனவே தான், இந்த ஆண்டில் தோன்றிய மிகப் பெரிய நாத்திகத்தலைவரான சிந்தனைச் சிற்பி. பகுத்தறிவுப் பகலவன், தமிழினத் தலைவர், பெரியார் ஈ. வெ. ரா ஆத்திகத் தலைவர்களுள் ஒருவரான சங்கராச்சாரியாரின் மறு அவதாரமே என்ற கருத்துப் பிறந்து வளர்ந்து முதிர்ந்து வருகின்றது.

ஆதிசங்கரர் சமசுக்கிருத மொழியில் மிகுதியாகச் செயல் பட்டிட்டார் என்பதால் அவரை ஆரியரென்றும்; ஆரிய வேத ஆதரவாளர் என்றும் கருதுவது தவறு. இன்றுள்ளோர் தமிழிலக்கியச் செல்வங்களை ஆங்கில மொழி மூலம் அறிவுலகுக்குப் பரப்புவதுபோல்; சேரநாட்டுச் செந்தமிழர் ஆதிசங்கரர், திருமூலர், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர்... முதலிய அருளாளர்களின் கருத்துக்களைத்தான் சமசுக்கிருத மொழி மூலம் இந்தியா முழுதும் பரப்பினார். அவர் சித்தர் வழி நின்று செயல்பட்டதால் தான் நான்கு பீடங்களை நிறுவினார், சமசுக்கிருத வேதங்களுக்குத் தமிழ் உரையாசிரியர்கள் போல் உரை எழுதிச் செயல்பட்ட ஆதிசங்கரர் ஒரு தமிழரே. இதற்குரிய சான்றுகள் அவருடைய நூல்களிலேயே இருக்கின்றன''

இக் கருத்துக்கள் இ. ம. இ. யின் தலைவர்களுள் ஒருவரான மாபெரும் வரலாற்றுப் பேராசிரியர், மார்க்சியச் சிந்தனையாளர், உலகப் பகுத்தறிவு இயக்க அமைப்பாளர்களுள் ஒருவர்... என்ற புகழுக்குரிய சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி அவர்களுடையது.

# அணிந்துரை

(பிரமாச்சாரியார் சி. கவிக்குமார்)

சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் "ஒரு ஆத்திகத் தலைவரே; மத மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட ஆன்மீக வாதியே; ஆரிய வருகையால் உண்மையான இந்து மதம் மடமைக்குரிய, மூடநம்பிக்கைக்குரிய, புரட்டுகளுக்குரிய, முதலாளித்துவத்திற்குரிய, சுரண்டலுக்குரிய, கேலிக்குரிய, கிண்டலுக்குரிய...... ஒன்றாக மாறிவிட்டது என்பதை விளக்கியுரைத்து மக்களை ஒன்று திரட்டிய சீர்திருத்தவாதியே; சமசுக்கிருத ஆட்சியால் சமசுக்கிருதமே தேவமொழி என்று கூறியும் கூறுமலும் செயல்பட்டு வரும் வட ஆரியர்களான பிருமணர்களின் திட்டமிட்ட சதியால் தமிழர்கள் தன்னுரிமையை தன்னுடைய நாட்டிலேயே இழந்து ஒற்றுமையின்றி பிறருக்கு அடிமைகளாய், கூலிகளாய், கங்காணிகளாய் வாழ்கின்ற அவல கேவல நிலையை எடுத்துக்கூறிச் செயல்பட்ட சிந்தனைவாதியே! ......என்ற அரிய பெரிய பேருண்மைகளை இந்நூலைப் படிக்கும் அனைவரும் உணர்வார்கள்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் கடவுளை மறுத்தார், வெறுத்தார், ஒதுக்கினார், தாக்கினார். எனவே, அவர் மத விரோதி, தமிழினத் துரோகி...... என்றெல்லாம் பலர் ஆராயாமல் சிந்திக்காமல் கூறிவருகின்றார்கள். ஆனால் அவருடைய பகுத்தறிவு மிகுச் செயல்களை நாம் சற்று ஆழமாக ஆராய்ந்து நோக்கினால் மேலே இந்து மதத் தந்தை, ஞாலகுரு சித்தர் கருவூரார், பெரியார் ஈ.வெ.ரா. பற்றிகூறிய கருத்துக்கள், வெளியிட்ட அறிவிப்புகள், கொடுத்த பட்டங்கள் யாவும் உண்மையே! ஏற்றுக்கொள்ளக் கூடியதே! என்பதை உணரலாம்.

1. ஆரம்ப காலத்தில் தமிழகத்தில், மூன்று சதவீதமாக இருந்து வந்த 'பிறமண்ணினரான பிருமணர்களை மையமாக வைத்து தமிழர்கள் தங்களுக்கு 'பிருமணர் அல்லாதோர் சங்கம் (Non Bramhine Association) எனத் துவக்கியதைக் கண்டித்து பெரியார் ஈ.வெ.ரா. 'சுயமரியாதைச் சங்கம் என்ற ஒன்றைத் துவக்கி அதன் மூலம் தமிழனுக்குத் தன்மான உணர்வை ஊட்டினார்.



2. பெரியார் ஈ.வெ.ரா. தான், தமிழர்களின் வாழ்க்கையில் அனைத்துத் துறைகளிலும் பிறமண்ணினரான பிருமணர்கள் தலைமையேற்று வழிநடத்துவதால்தான் தமிழினம் பார்ப்பானிடம் தலைகுனிந்து கிடக்கின்றது. அவனைச் சுரண்டும்படி அனுமதிக்கின்றது—என்று துணிந்து கூறி தமிழர்கள் அனைவரும் அருளாளர்களாக, அருட்சகர்களாக, பூசாரிகளாக......மாற வேண்டும். அனைவரும் கோயிலின் கருவறைக்குள் செல்ல வேண்டும். தமிழன்தான் மதத்தலைமையை ஏற்க வேண்டும்...... என்று கூறினார்.

3. பெரியார் ஈ.வெ.ரா. தான் ஆரியர்களின் கற்பனையால், பொருளற்ற சாத்திரச் சம்பிரதாயச் சடங்குகளால் இந்து மதம் பலத்த கேலிக்கும் கிண்டலுக்கும் சுரண்டலுக்கும் மடமைக்கும் மற்ற சமுதாய நலக்கேடுகளுக்கும் உரிய தொன்றாக மாறிவிட்டது. கோயில்கள் பிறமண்ணினரான பிருமணர்களின் கொட்டங்களுக்கும், கொள்ளைகளுக்கும் உரிய ஒன்றாக மாறிவிட்டதால் பாழ்பட்டு விட்டது. தமிழன்றி செத்துப் போன சமசுக்கிருத மொழியில் மந்திரங்களைச் சொல்வதால் யாதொரு பயனுமில்லை......என விளக்கியதோடு மட்டுமல்லாமல், கோயில்களை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும்; கோயில்களின் கணக்குகளைப் பொது மக்களின் பார்வைக்கு வைக்கவேண்டும். தமிழ் மொழியில்தான் அருச்சனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

4. ஆரியர்களால் மாசுபடுத்தப் பட்டுவிட்ட இந்துமதத்தை மட்டுமே பெரியார் தாக்கினார்; கிண்டல் செய்தார்; ஆரியர்களால் புனைந்துரைக்கப்பட்ட கட்டுக் கதைகள் நிரம்பிய புராண இதிகாசங்களை நகையாடினார் என்பதுதான் உண்மை! உண்மை! உண்மை!!!... ஆனால் இங்கர்சாலும் மார்க்சும் அனைத்து மதங்களையும் தாக்கியது போல் இவர் அனைத்து மதங்களையும் தாக்கவில்லை. இது உண்மையான இந்து மதத்தின் மீது அவருக்கிருந்த அளவற்றப் பற்றையும் பாசத்தையும் காட்டுகின்றது.

எனவேதான் பெரியார் ஈ. வெ. ரா. தமிழர்கள் தங்களுடைய உண்மை மதிப்பை உணர்ந்து வீறுகொண்டெழுந்து இந்து மத ஆலயங்களை சீரமைக்க வேண்டும் மீண்டும் தமிழ் மொழியை எல்லா ஆலயங்களிலும் ஒலிக்கச்செய்யவேண்டும் என்பதற்காகத்தான் தமிழ் முன்னோர்கள் செதுக்கி வைத்துவிட்டுச் சென்றிருக்கும் சிலைகளை உடைக்காமல் தானே ''பிள்ளையார்'' சிலைகளை செய்து உடைத்தெறிந்தார். இந்நிகழ்ச்சியே அவரின் பத்தியுணர்வை வெளிப்படுத்துகின்றது.

5. பெரியார் இந்தி மொழியின் ஆட்சியை எதிர்த்ததால்தான் இந்தி மொழி வெறியர்களின் ஆட்சியிலிருந்து தமிழகத்தை முழுமையாக மீட்டுத்தர முடிந்தது இந்த மாபெரும் பணியின் மூலம் தமிழன் ஒவ்வொருவனும் தன்னை -தன்னுடைய பாரம்பரியத்தை உணரவேண்டும்; பிற மண்ணினரான பிருமணர்களின் ஆதிக்கத்தை அறியவேண்டும்; தலைவனில்லாமல் நாதியற்றுக்கிடக்கின்ற தமிழகத்தின் நிலையைப்புரிய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

ஆனால் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமையை யேற்று வழி நடத்தி வரும் இந்து மதத் தந்தை குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் பெரியார் ஈ. வெ. ரா விட்டுச் சென்றுள்ள மாபெரும் போர்க்காலப் பணிகளை அணிதிரட்டிச் செயல்பட அனைத்துத் தமிழக மக்களுக்கும் மேற்கூரிய சிந்தனைகளை வழங்கி வருகின்றார்.

பதினெண் சித்தர்கள் அருட்கொடையாக வழங்கிச் சென்றிருக்கும் தமிழ் மந்திரங்களை, அருட்கலைகளை, சமுதாய நெறிமுறைகளைகற்றுத் தேர்ந்து அன்றாடவாழ்க்கையில் பயன்படுத்துவன் மூலம்தான் நாம் வாழ்க்கையில் சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலிருந்தும் முழுமையாக வடஆரிய மாயைகளையும், ஏமாற்றுகளையும், தவறுகளை



யும், சூழ்ச்சிகளையும், அண்டப்புளுகுகளையும், ஆபாசக் கற்பனைகளையும், ஆகாயப் பொய்களையும், காட்டுமிராண்டித்தனங்களையும், .. ... அகற்றி தன்மான உணர்வோடு செயல்பட வேண்டும்

சமய- சமுதாய- அரசியல்- கலை-இலக்கிய- தொழில் துறைகள் அனைத்திலும் தமிழர்களும் தமிழ்மொழியும் தமிழுணர்வும் முதன்மை பெற்று செல்வாக்கு பெற்று ஆட்சி பெறக் கூடிய நிலையை உருவாக்க பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்குப் பின்னால் நாங்கள் தான் பாடுபடுகின்றோம். எங்களால் தான் இந்த நாட்டின் சமயத்துறையிலுள்ள கறைகள் மட்டுமல்லாது சமுதாயத்திலுள்ள வறுமை, மிடிமை, இல்லாமை, இயலாமை, ஏக்கம். தேக்கம், வீக்கம், சுரண்டல், சாதிக்கொடுமைகள் தீண்டாமைகள், வேறுபாடுகள் மாறுபாடுகள், பகைமைகள்......முதலிய அனைத்துக் குறைபாடுகளையும் முழுமையாக அகற்ற முடியும். ஏனெனில் பதினெண் சித்தர்கள் வகுத்துத் தந்துவிட்டுச் சென்றுள்ள 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைக்கும் வாக்குகளும் வாசகங்களும் எங்களிடம்தான் உள்ளன இவற்றை முறையாகவும் முழுமையாகவும் செயல்படுத்தும் வண்ணமாகத்தான் இ... இ யின் கௌரவத் தலைவராகப் பெரியார் ஈ. வெ. ரா. வை ஏற்றுக் கொண்டோம்,

இனியாவது தமிழகத்தை முழுமையாக வட ஆரிய இனப் பார்ப்பனர்களின் பிடிகளிலிருந்தும்; நயவஞ்சகச் சூழ்ச்சி வலையிலிருந்தும் விடுவிக்கும் இம் மாபெரும் பணியில் தோளோடு தோளாக நின்று போராட தமிழ் மொழி, இன, நாட்டுப் பற்றாளர்களும், இளைஞர்களும், திராவிடர்க் கழகத்தவரும், பகுத்தறிவாளர்களும், நாத்திகர்களும். ஆத்திகர்களும், அறிவாளர்களும், தங்களின் மேலான ஆதரவுகளை எல்லாவகையிலும் தருவார்களாக!

அன்பு,

தலைமைப்பொறுப்பாளர் சி கவிக்குமார்

# இயக்கத்தின் மறுமலர்ச்சிப் பணி

(குருதேவர் மாத அறிக்கையில் தொடராக வெளிவந்த 'உண்மையான இந்து மத உயர்ச்சிக்காக வட ஆரிய வேத நெறிக்குக் கண்டிப்பு' என்ற கட்டுரையிலிருந்து சில வாசகங்கள்)

"......துறவியானவன் தனக்கு மட்டுமே நன்மை செய்து கொள்பவன் என்பதால் இவன் கையால் திருநீறு, குங்குமம்... முதலியவைகளைப் பெறவே கூடாது. இல்லறம் ஏற்காது இளமையிலேயே! துறவியாகிறவர்களைப் பார்ப்பதும் பெரும் பாவமாகும். இவர்களை வழிபாட்டு நிலையங்களிலும், வழிபாடுகளிலும் ஒதுக்கியும் விலக்கியும் கடைநிலையில் வைத்திருந்தால்தான் கோயில்கள் பாழ்படா! அருட்பணிகள் குன்றிட மாட்டா!.........என்று பதினெண் சித்தர்கள் மிக மிகத் தெளிவாகக் குறிக்கின்றார்கள்.

"...காயந்திரி மந்தரம் அனைவரும் ஓதலாம் என்பதே சித்தர்கள் வகுத்த நெறி! ஆனால் வட ஆரிய வேதநெறியினர் ஆண்கள் மட்டுமே கூறவேண்டும் என்று தவறாகக்கூறுகின்றார்கள். 'ஆண், பெண் இருவரும் சமம்! பெண்ணே சக்தி! பெண்ணே தெய்வம்...... என்றெல்லாம் முற்போக்குக் கொள்கை கொண்ட இந்து மதத்தினரை கேவலப்படுத்தும் முறையிலும் பெண்களை அடிமைப்படுத்தும் முறையிலும் இக்கூற்றை பார்ப்பனர்கள் கூறி வருகின்றார்கள்.........".

"...காயந்திரி மந்தரத்துக்கென்று யாகம் செய்வதென்பது பெரிய ஏமாற்று வேலையே! இருந்தும் வட ஆரியர்கள் [illegible] போக்கில் மிதமிஞ்சிய அறிவற்ற போக்கில் [illegible] மந்தரங்களை யாகத்தில் பயன்படுத்தி வருகின்றனர். இது மிகவும் விந்தைக்கும், வியப்புக்கும், வேதனைக்கும்; ஏமாற்றத்துக்கும் உரியனவாக உள்ளதோடு; அவர்களின் [illegible] அறியாமையையும், பூசை நெறிகளில் அரைகுறை [illegible] தன்மையையும் வெட்ட வெளிச்சமாக்குகின்றது.

"......இப்படிப்பட்ட குருட்டுத்தனத்தால்தான் [illegible] கேலிக்கும், கிண்டலுக்கும், மறுப்புக்கும், வெறுப்புக்கும், [illegible] நகைச்சுவைக்கும் உள்ளாகி நலிந்தும் [illegible] வருகின்றது. இப்போக்கினை வளர்த்துவரும் வட ஆரிய [illegible] நெறியினரை இக்கட்டுரையின் வாயிலாகக் கடுமையாகக் கண்டிக்கின்றது இ. ம. இயக்கம், திருந்துவதற்கும், [illegible] வதற்கும் வாய்ப்பினை நல்குகின்றது......"

"......இவர்களைத் திருத்திட ஒரே வழி பதினெண் சித்தர்கள் படைத்துச் சென்றுள்ள இந்து மதக் கலைகளையும் அறிவியல்களையும் சாதி, இன பாகுபாடின்றி அனைவருக்கும் கற்றுக்கொடுத்து அருளை அநுபவப் பொருளாக்கிடல் வேண்டும்.

# பெரியார் ஈ.வெ.ரா.வே கூறியுள்ளார்

# நான் நாத்திகர் அல்ல என்று.

# பெரியார் ஈ. வெ. ரா. ஓர் ஆத்திகரே.

14—12—47ல் திருவண்ணாமலை திராவிடர் கழக மாநாட்டில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பேசிய பேச்சிலிருந்து (சொற்பொழிவு) எடுக்கப்பட்ட வாசகம்.

"......இஷ்டப்பட்டால் நீங்கள் கோயிலுக்குப் போங்கள் வேண்டாமென்று கூறவில்லை.

பக்திப் பரவசமாகி, ஆனந்தக் கூத்தாடுங்கள். அதையும் வேண்டாமென்று கூறவில்லை.

ஆனால் அந்த அழுக்குப் பிடித்த பார்ப்பனனுக்கு ஏன் தலை வணங்குகிறீர்கள்?

அவனை ஏன் தரகனாக்கிக் கொள்கிறீர்கள்?

அவனுக்கு ஏன் உங்கள் காசை அள்ளி எறிகிறீர்கள்?

அவன் மொழிக்கு ஏன் அடிமையாகுகிறீர்கள் என்றுதானே உங்களை கேட்கிறோம்.

இதுவா நாஸ்திகம்? இதுவா துவேஷம்?

*(ஆதாரம் 'உண்மை' மாதமிருமுறை ஏடு)*
*1—6—83 பக்கம் 5*